4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு இந்தியத் தண்டனைச் சட்டத்திற்கான மற்றும் குற்ற வழக்கு விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்திற்கான (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

TRUTH ALONE TRIUMPHS